# மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின்
# 2019-2020-ம் நிதி ஆண்டு அறிக்கை

**(Annual Report)**

அரசாணை (எம்.எஸ்) எண்.57, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.19.05.2017, அரசாணை (எம்.எஸ்) எண்.90, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.27.07.2017 மற்றும் அரசாணை (எம்.எஸ்) எண்.81, தொழில் (எம்.எம்.டி.1) துறை, நாள்.14.08.2018-ன்படி உருவாக்கப்பட்ட தமிழ்நாடு மாவட்ட கனிம கட்டமைப்பு விதிகள் 2017-ன்படி மதுரை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணைகள் ந.க. எண்.764/2017-கனிமம், நாள்.12.09.2017-ன்படி மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையானது கீழ்க்குறிப்பிட்டுள்ள அலுவலர்களை உறுப்பினர்களாகக் கொண்டு உருவாக்கப்பட்டு, இவ்வறக்கட்டளையானது ஆவண எண்.119/2017/BK4, நாள்.21.09.2017-ன்படி தல்லாகுளம் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | நிர்வாகக் குழு அமைப்பு | வ.எண் | மேலாண்மைக் குழு அமைப்பு |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சியர், மதுரை | 1. | மாவட்ட ஆட்சியர்,மதுரை |
| 2. | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 2. | மாவட்ட வருவாய் அலுவலர்,மதுரை |
| 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. | 3. | துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை. |
| 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 4. | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை |
| 5. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை | 5. | மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர், (வளர்ச்சி), மதுரை |
| 6. | முதன்மைக் கல்வி அலுவலர், மதுரை | 6. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து), மதுரை |
| 7. | மாவட்ட கருவூலஅலுவலர், மதுரை | 7. | மாவட்ட ஆதிதிராவிட நல அலுவலர், மதுரை |
| 8. | மாவட்டசமூகநலஅலுவலர், மதுரை | 8. | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், மதுரை |
| 9. | உதவி இயக்குநர் (பஞ்சாயத்து),மதுரை | 9. | மாவட்ட வன அலுவலர்,மதுரை |
| 10. | திரு. எ. ரவீந்திரன்,<br>எண். 30, சங்கர்நகர் 3வது தெரு, கோ.புதூர், மதுரை<br>(அரசுசாரா அலுவலர்) | 10. | முதன்மைப் பொறியாளர்,<br>பொ.ப.து,நீ.ஆ.அ,மதுரை |
| 11. | திரு. எஸ்.எல். சொக்கலிங்கம்,<br>கூடுதல் இயக்குநர், (ஓய்வு),<br>புவியியல் மற்றும் சுரங்கத்துறை, சென்னை | 11. | உதவி இயக்குநர், நில அளவை, மதுரை |

| | | | |
|---|---|---|---|
| | | 12. | மாவட்ட கருவூல அலுவலர்,மதுரை |
| | | 13. | மாவட்ட சமூக நல அலுவலர், மதுரை |
| | | 14. | துணை இயக்குநர், (சுகாதாரம்), மதுரை |
| | | 15. | இணை இயக்குநர், (வேளாண்மை), மதுரை |
| | | 16. | தொழிலாளர் ஆய்வாளர், மதுரை |

மதுரை மாவட்ட கனிம அறக்கட்டளைக்காக, பாரத ஸ்டேட் வங்கி, வணிகவரி அலுவலக கிளையில் ஒரு வங்கிக் கணக்கு (கணக்கு எண். 37193268816) துவக்கப்பட்டு சிறு மற்றும் பெருங்கனிமங்களுக்கான உரிமக் கட்டணத்தின் அடிப்படையில் உரிய விதிகளின்படி மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளைக்கான நிதி வசூலிக்கப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 16 பெருங்கனிம சுரங்கக் குத்தகை உரிமங்களும், 96 சிறு கனிம குவாரி (103 கிரானைட் குவாரிகள் நீங்கலாக) குத்தகை உரிமங்களும் நடப்பிலுள்ளன. நடப்பிலுள்ள 16 பெருங்கனிம உரிமங்களும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் இசைவு பெற்று சமர்ப்பிக்காத காரணத்தினாலும், வேறு சில காரணங்களுக்காகவும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பிலுள்ள 96 சிறுகனிம குவாரி குத்தகை உரிமங்களுக்கு உரிமக் கட்டணத்தில் 10% தொகையும் கனிம அறக்கட்டளை நிதியாக வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மதுரை மாவட்டத்தில் 111 கிராம ஊராட்சிகள் சுரங்கப் பணிகளால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளாக கண்டறியப்பட்டுள்ளன.

மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக 31.03.2020 வரை **ரூ.2,77,87,995/-** (ரூபாய் இரண்டு கோடியே எழுபத்து ஏழு இலட்சத்து எண்பத்து ஏழாயிரத்து தொள்ளாயிரத்து தொண்ணூற்று ஐந்து மட்டும்) வசூலிக்கப்பட்டு அறக்கட்டளை வங்கிக்கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது. இதில் 2019-2020 ஆண்டிற்கு மட்டும் **ரூ.85,28,383/-** (ரூபாய் எண்பத்து ஐந்து இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து முந்நூற்று எண்பத்து மூன்று மட்டும்) கனிமக் கட்டமைப்பு அறக்கட்டளை நிதியாக வசூலிக்கப்பட்டுள்ளது.

2019-2020 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் ஏதும் வழங்கப்படவில்லை.

ஏற்கனவே 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்டு **ரூ.23,61,600/- (ரூபாய் இருபத்து மூன்று இலட்சத்து அறுபத்து ஓராயிரத்து அறுநூறு மட்டும்)** மதிப்பிலான 5 திட்டங்களின் பணிகள் நிறைவடைந்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 1. | கச்சைகட்டி ஆரம்ப சுகாதார நிலையத்தில் சுற்றுச்சுவர் அமைத்தல் | கச்கைகட்டி / வாடிப்பட்டி | ரூ. 5,00,000/- | 09.04.2018 | நிறைவேற்றப் பட்டது |
| 2. | கச்சைகட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு 605 கேவிஏ டீசல் ஜெனரேட்டர் வழங்குதல் | கச்கைகட்டி / வாடிப்பட்டி | ரூ. 3,50,000/- | 09.04.2018 | நிறைவேற்றப் பட்டது |
| 3. | எழுமலை கிராமத்தில் உள்ள அரசு சுகாதார மையத்திற்கு தேவையான (Generator (5KV)-1, Inverter -1, Fogging Machine (pulse)-1, Baby Warmer -1, Semi Auto Analyser -1, LCD Projector -1, Ring Lamp -1, Micro Piper -2, BP Apparatus -4, Spirometer (portable)-1, Audio Meter (Portable) -1) ஆகிய மருத்துவ உபகரணங்கள் வழங்தகுல் | எழுமலை / பேரையூர் | ரூ. 5,49,200/- | 12.09.2018 | நிறைவேற்றப் பட்டது |

| வ. எண் | திட்டத்தின் பெயர் | கிராமம் மற்றும் வட்டம் | ஒதுக்கீடு செய்த தொகை (ரூ.) | ஒதுக்கீடு செய்யப்பட்ட தேதி | திட்டத்தின் நிலை |
|---|---|---|---|---|---|
| 4. | நிலையூர் பிட் 2 கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான (Generator (5KV)-1, Fogging Machine (pulse)-1, Baby Warmer -1, Semi Auto Analyser -1, Ring Lamp -1, Micro Piper -2, BP Apparatus -4, Spirometer (portable)-1, Audio Meter (Portable) -1) ஆகிய மருத்துவ உபகரணங்கள் வழங்தகுல் | நிலையூர் பிட் 2 / திருப்பரங் குன்றம் | ரூ. 4,31,200/- | 12.09.2018 | நிறைவேற்றப் பட்டது |
| 5. | பாலமேடு கிராமத்தில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு தேவையான (Providing Generator (5KV)-1, Fogging Machine (pulse)-1, Baby Warmer -1, Semi Auto Analyser -1, LCD Projector - 1, Ring Lamp -1, Micro Piper -2, BP Apparatus -4, Spirometer (portable)-1, Audio Meter (Portable) -1) மருத்துவ உபகரணங்கள் வழங்தகுல் | பாலமேடு / வாடிப்பட்டி | ரூ. 5,31,200/- | 12.09.2018 | நிறைவேற்றப் பட்டது |

*மேற்கண்ட நிதியிலிருந்து ரூ.14,021/- (ரூபாய் பதினான்காயிரத்து இருபத்து ஒன்று மட்டும்) செலவீடு செய்ய தொகை போக மீதமுள்ள தொகையாக திரும்ப வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்ட 3 திட்டங்களுக்கு கீழ்கண்டவாறு நிதி வழங்கப்பட்டு திட்டம் நிறைவடைந்துள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப் படுத்தும் அமைப்பு | திட்டம் நிறைவேற்றப் பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1. | குடிநீர் பயன்பாடு | அத்திப்பட்டி கிராம ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | ரூ. 4,19,496/- | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 04.10.2019 |
| 2. | குடிநீர் பயன்பாடு | தொட்டனாம்பட்டி கிராமத்தில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | ரூ. 3,99,262/- | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 04.10.2019 |
| 3. | குடிநீர் பயன்பாடு | பொருப்பு மேட்டுப்பட்டி கிராம ஆதிதிராவிடர் குடியிருப்பில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | ரூ. 4,19,790/- | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | 04.10.2019 |
| | | **மொத்தம்** | **ரூ. 12,38,548/-** | | |

மேலும் 2018-2019 ஆம் நிதியாண்டில் மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளை மூலமாக நிர்வாக மற்றும் நிதிசார்ந்த ஒப்புதல் வழங்கப்பட்ட கீழ்கண்ட திட்டங்கள் நிலுவையில் உள்ளது.

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) | நடைமுறைப் படுத்தும் அமைப்பு | திட்டம் நிறைவேற்றப் பட்ட நாள். |
|---|---|---|---|---|---|
| 1. | குடிநீர் பயன்பாடு | உலகானி கிராமத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் நிலையம் அமைத்தல் | ரூ. 1,50,000/- | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது |
| 2. | மின்சக்தி | செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றிய பகுதியில் மின்விளக்குகள் அமைத்தல் | ரூ. 60,000/- | திட்ட இயக்குநர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, மதுரை | பணிகள் மேற் கொள்ளப்பட்டு வருகிறது |

2019-2020 நிர்வாக செலவுகள் செய்யப்பட்ட விபரம்:

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பு (ரூபாயில்) |
|---|---|---|
| 1. | தரவு பதிவு செய்பவர் ஊதியம் | ரூ. 1,18,800/- |
| 2. | அரசாணை பல்வகை எண். 112, தொழில் (எம்.எம்.டி-1) துறை நாள்: 30.05.2019-ன்படி இயக்குநரகத்திற்கு பகிர்ந்தளிக்கப்பட்ட 1% நிதி | ரூ. 58,388/- |
| 3. | மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சட்டசபை அறிவிப்பின்படி I-Pad வாங்குவதற்காக செலவு செய்யப்பட்ட தொகை | ரூ. 2,16,778/- |
| | மொத்தம் | **ரூ. 3,93,966/-** |

இவ்வறிக்கையானது மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு அறக்கட்டளையின் மேலாண்மை மற்றும் நிர்வாக குழு முன்பு சமர்ப்பிக்கப்பட்டு ஒப்புதல் செய்யப்பட்டது.

தலைவர், மதுரை மாவட்ட கனிம கட்டமைப்பு
அறக்கட்டளை / மாவட்ட ஆட்சித்தலைவர்,
மதுரை.